**ஆண்கள் ஐக்கிய ஞாயிறு**
**9.06.2013**
**வேதவினா - I சாமுவேலின் புத்தகம்**

**I. ஒரு வார்த்தையில் பதில் எழுதுக : (10)**

1. இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் -
2. சிவந்த மேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுள்ளவன் -
3. மகிமை இஸ்ரவேலை விட்டு போயிற்று -
4. கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் -
5. காது கேளாதவன் போல் இருந்தவன்
6. மகாபாரிக் குடித்தனமாயிருந்தவன் -
7. அந்த பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழுந்தது, எந்த பட்டணம்
8. அவனோ தன் சிறுவயது முதல் யுத்தவீரன்.
9. ராமதாயீம் ஊரானாகிய மனுஷன் யார்
10. தேனினால் தன் கண்கள் தெளிவுபெற்ற மனிதன் யார்

**II. யார் இவர்கள் - கீழே கொடுக்கப்பட்ட குறிப்பில் இருந்து கண்டுபிடியுங்களேன் (5)**

1. அவர்கள் இருவரும் ஒரே நாளில் சாவார்கள் - யார் அவர்கள்
2. தன் குமாரர் மரித்த செய்தியை கேட்டபின் தானும் மரித்தவன்
3. தமது குமாரரோடு தானும் மரித்தவன். அவன் யார்
4. பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தை புரட்டின சகோதரர்கள் யார் ?
5. கொலைக்கு தப்பின ஆசாரியரின் குமாரன்

**III. <u>யார் யாரிடம் எப்போது கூறியது</u>:- {ஏதாவது பத்து (10)} (20)**

1. நீ தேவனுடைய தூதனைப்பேல் என் பார்வைக்குப் பிரியமானவன்.
2. மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்
3. புத்தியீனமாய்ச் செய்தீர். உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளைகளை கைக்கொள்ளாமல் போனீர்.
4. என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்
5. கர்த்தருக்கு பயந்து உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள். அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களை செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்
6. நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக
7. நீரும் நானும் பேசிக்கொண்ட காரியத்திற்கு, இதோ கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடு நிற்கும் சாட்சி
8. கர்த்தர் உன்னைவிட்டு விலகி உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்.
9. என்னை கொன்றுபோடும்படி, நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன என்றாள்
10. நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றையதினம் எனக்குத் தடை பண்ணினபடியினால், நீயும் ஆசிர்வதிக்கப் படுவாயாக.
11. நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்
12. ஒரு வேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார். அனேகம் பேரைக்கொண்டாகிலும் கொஞ்சப்பேரைக் கொண்டாகிலும் ரட்சிக்கக் கர்த்தருக்கு தடையில்லை

IV. I சாமுவேலில் உள்ள நபர்கள் மூலமாக கற்று நாம் கடைபிடிக்க கூடிய 10 நல்ல காரியங்களை எழுதுக: (10)
உதாரணம் : அன்னாள் பொருத்தனை பண்ணி ஜெபித்தாள், குமாரனை பெற்றுக் கொண்டாள்

V. I சாமுவேலில் உள்ள நபர்கள் மூலமாக நாம் விலக்கக் கூடிய 10 தீமையான காரியங்களை எழுதுக. (10)
உதாரணம் : சவுல் பொறாமையின் காரணமாக தாவீதை கொலை செய்ய வகை தேடினான்